**கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கிரிக்கெட் எய்ட் (உத்தரவாதத்தினால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதி நடவடிக்கைகள் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நாட்பட்ட சிறுநீரக நோய் நிதிக்காக இங்கிலாந்தில் நிதி திரட்டும் நிகழ்ச்சித் திட்டம் | | அச்சிடப்பட்ட மற்றும் விற்கப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள், சீட்டுக்களின் விலை, நிகழ்ச்சித்திட்டக் கிரயம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்த வருமானம், நிகழ்ச்சித் திட்டக்காலம், நிகழ்வுகள் முகாமைத்துவக் கம்பனியின் தெரிவு நடைமுறை மற்றும் அவற்றின் செயற்பாடுகள், நிகழ்வுகள் முகாமைத்துவக் கம்பனிக்கான கொடுப்பனவுகள், ஏலத்தில் விடப்பட்ட பொருட்கள்,கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பட்டில்கள், வங்கி வைப்புச் சீட்டுக்கள் மற்றும் விரிவான அறிக்கைகள் | செயற்திட்டம் 2016 இல் மேற்கொள்ளப்பட்டதால், இது 2016 இன் நிதிக்கூற்றுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும், ஆனால் இது 2021 இன் நிதிக்கூற்றுக்களைப் பாதிக்காது. | நிகழ்ச்சித் திட்டத்திற்காக திரட்டப்பட்ட மொத்த நிதி மற்றும் மொத்தச் செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (i) நிகழ்ச்சித் திட்ட வருமானம் | 3,295,000 | | | |
| (ii) நிகழ்ச்சித் திட்ட செலவு | 12,443,706 | | | |
| (iii) நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் | 3,807,491 | | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 248,000 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 248,500 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 500 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது வங்கிக்கட்டணங்கள் குறைவடைந்தமை இம்முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் பணியாளரின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 86,360 செலுத்த வேண்டிய PAYE வரி நிலுவைத் தொகையானது 2024 யூலை 31 வரை உள்நாட்டு இறைவரி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படவில்லை. | வரி செலுத்துவோர் அடையாள எண் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை. | PAYE வரி உள்நாட்டு இறைவரி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பரிந்துரைகளின்படி, நிறுவனத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும், நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கைகள் நிறைவடையவில்லை. . | நிறுவனம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனது செயல்பாடுகளை நிறுத்திய போதிலும் . கம்பனிப் பதிவாளர் கோரியபடி 2023 ஆம் ஆண்டு வரை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இல்லாததால், கலைப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை குறிப்பிட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து அதற்கேற்ப கலைப்பு நடவடிக்கையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும |